2. தகவல் கோரல்.

(அ) அரசியல் சட்டத் திருத்தம் தமிழில் தரப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

* திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜ்ய சபாவிலிருந்து நிறைவேற்றியிருக்கும்படியான 62-வது அரசியல் சட்டத் திருத்தம் ஆங்கிலத்திலும் அதனுள்ளே கொஞ்சம் இந்தியிலுமாக இரண்டு மொழிகளிலேதான் இருக்கிறது. நம்முடைய நண்பர்கள் பலபேர்கள் ஆங்கிலம் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். இந்தி தெரியாதவர்கள் ஏராளமான பேர் இருக்கிறார்கள். அவைகளை தமிழில் இதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கு என்ன ஏற்பாட்டைத் தாங்கள் செய்ய இருக்கிறீர்கள். மத்திய அரசே பார்த்து மொழி பெயர்ப்புச் செய்து அனுப்பி இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் செய்ய வில்லை . . . .

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் கேட்டதற்கு விடை சொல்லி விடுகிறேன். தமிழிலே தரவேண்டுமென்று மதிப்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழிலே தரப்பட வேண்டும் என்பது தான் மத்திய அரசினுடைய கோட்பாடு, மும்மொழிக் கொள்கை பின்பாடு. எனவே முடிந்தால் மத்திய அரசே இதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் இல்லாவிட்டாலும் தமிழக அரசே இதைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிக்கைகள்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் நீதிமன்றம் தீர்ப்பு எதுவும் கூறவில்லை என்று சொல்லியிருந்தார்கள். ஆனால் நீதிமன்றம் 10—1—1989-ல் தீர்ப்பு ஒன்று வழங்கி . . . .

1989 பிப்ரவரி 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாங்கள் கொடுத்த உரிமைப் பிரச்சினை ஆய்வில் உள்ளது. அது குறித்து நாளை தெரிவிக்கப் படும்.

திரு. எம். அப்துல் லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்போது சில கருத்துக்களை —Judicial Observations

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் எழுப்பிய உரிமைப் பிரச்சினைக்கு பேரவைத் தலைவர் விடை சொல்லிவிட்டார். எனவே இடையில் சொல்வதற்கு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) வேறு பிரச்சினையாக இருந்தால் சொல்லுங்கள்.

(இ) தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பெற்ற காவல்துறை உயர் அதிகாரி தெரிவித்த கருத்து.

திரு. எம். அப்துல் லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் உயர் அதிகாரியாக இருந்த ஒருவர், டி.ஐ.ஜி. யாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர் திரு. வித்தியாசாகர். அவரைத் தற்காலிகமாக வேலையிலிருந்து அரசு நீக்கி இருக்கிறது. அதைத் தான் சந்திக்கத் தயார் என்று அவர் விடை அளித்திருக்கிறார். எனவே இது தொடர்பாக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குறித்து நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானமோ, ஒத்திவைப்புத் தீர்மானமோ கொடுக்க வேண்டுமே தவிர நேரடியாக இப்போது கேட்பது முறையாகாது. பேரவை இதைப்பற்றி தாங்கள் குறிப்பிட விரும்பினால் நன்கறிந்து உரையாற்றுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே அருள்கூர்ந்து அப்போது எழுப்ப வேண்டும். (குறுக்கீடு) இது தொடர்பாகத் தீர்மானம் கொடுப்பதற்கு உறுப்பினருக்கு முழு உரிமை இருக்கிறது. அதைப் பயன்படுத்தத் தவறிவிட்டார்களோ என்று நான் கருதுகிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிக்கைகள்—தொடர்ச்சி.

* **திரு. ரவி அருணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்தில் மதுரா கோட்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்குப் பணிக்கொடை ஊதியம் பாக்கியை வழங்காததால் அந்தத் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு . . .